**தலைப்பு 219 – விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 நவம்பர் 22 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்டோபர் 18 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும், நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் , மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள் , செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கமளிப்பதால், பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல், மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் , சம்பவங்கள் பொருத்தமாகவும், நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் சென்ற ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக என்னால் செய்யப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் ரூபா 214,180,540 ஆன வேலை தொடங்குவதற்கான முற்பண மிகுதிக்கு ரூபா 32,791,686 ஆன பெறுமதி சேர் வரி உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களில் வேலை தொடங்குவதற்கான முற்பண மிகுதி ரூபா 32,791,686 ஆல் அதிகமாக காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் எமது கணக்கு முறைமை மாற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் 2016.08.03 ஆந் திகதிய 2016/250(i) ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் அடிப்படையில் மேற்குறிப்பிடப்பட்ட முறைமை பின்பற்றப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம 06 இன் பிரகாரம் வாடகை மற்றும் வேலை முற்பணங்கள் சரியாக கணக்கில் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 நிதியல்லாச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்திற்குச் சொந்தமான 09 இடங்களில் விளையாட்டு மைதானம் மற்றும் தங்கும் விடுதிகள் அமைக்கப்பட்டிருந்ததுடன் இச்சொத்துக்கள் கணக்கில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றேன். | இச்சொத்துக்களுக் கள் குறிப்பிட்ட சொத்துக்கள் பதிவேட்டில் கணக்கில் எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் கோரப்பட்டிருந்த கட்டுநிதி ரூபா 4,890.9 மில்லியன் என்பதுடன் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கட்டுநிதி ரூபா 1,314.8 மில்லியன் ஆகும். செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பணிகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறைவேற்றப்பட தவறியமை அப்பணிகள் வருட இறுதியில் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை மற்றும் போதியளவில் தேவையான கட்டுநிதி திறைசேரியினால் வழங்கப்படாத காரணத்தினால் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பணிகள் சரியாக நிறைவேற்றப்படுவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பல சந்தர்ப்பங்களில் திறைசேரியினால் ஒதுக்கங்கள் வழங்கப்படுவதால் ஒட்டுமொத்தமாக வருடாந்தச் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய செயற்பாடுகளையும் முறையாகத் திட்டமிடுதல் சிரமமாக இருந்தது. | திட்டமிடப்பட்ட வாறு கட்டுநிதி பெறப்பட்டு குறிப்பிட்ட பணிகள் முடிக்கப்படல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| <u>**வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடு தயாரித்தல்.**</u> | | |
| செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த மூலதனத் தேறிய ஒதுக்கங்கள் ரூபா 999,046,000 என்பதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அதில் ரூபா 792,201,162 ஆனது பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய ஒதுக்கத்தில் ரூபா 206,844,832 அதாவது நூற்றுக்கு 20.7 வீதம் சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உடன்படுகின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2(ஈ) பிரகாரம் ஒரு குறிப்பிட்ட நிதியாண்டிற்கான அனைத்து பொறுப்புக்களும் அவ்வருடத்திற்குள் பணம் செலுத்தப்பட்டு விடுவிக்கப்பட வேண்டியதுடன் எவ்வித பொறுப்புக்களும் அடுத்த வருடத்தில் தீர்க்கும் நோக்கத்தில் எதிர்காலத்திற்கு கொண்டு செல்லப்பட முடியாது. எனினும் பொறுப்புக்களாக காட்டப்படாத 21-2-2-2-1409 ஆம் இலக்க (சர்வதேச விளையாட்டு) செலவு விடயத்தில் ரூபா 36.61 மில்லியன் ஒதுக்கங்களை விஞ்சியதாக மீளாய்வாண்டில் ரூபா 37,877,351 செலவு செய்யப்பட்டிருந்தது. | தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்காக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 344 மில்லியனில் ரூபா 250 மில்லியன் மட்டுமே திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்ததுடன் தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு திறைசேரியினால் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 100 மில்லியன் வழங்கப்படாமை மற்றும் சர்வதேச போட்டிகள் என்பதால் விளையாட்டுக் குழுக்கள் பங்கேற்க வேண்டியிருந்தது. | கடப்பாடுகளுக்கு உடன்படும் போது நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2008(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் முகாமைத்துவச் சுற்றறிக்கை | | | |
| (i) | 2.3 ஆம் பந்தி | குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனத்தின் பிரகாரம் குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனத்தை தயாரித்தல், அத்தகைய நடவடிக்கைகளை செயற்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டிற்கான முறைமை ஒன்றை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது. | குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 6.5 ஆம் பந்தி | மொத்த ஊழியர்களுக்குமான வருடாந்த செயற்திறன் ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் செயற்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.5 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரியொருவரின் 15 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 58,450 ஆன பழைய கடன் நிலுவைக்கான கடன் கோவை ஆவணக் காப்பகத்தில் இல்லாமை மற்றும் 05 ஆண்டுகள் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாத காரணத்தினால் அக்கடன் மரணப் பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கும் முடியாத நிலை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | கடன் தொகையைச் செலுத்துமாறு வாரிசுகளுக்குத் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய கடன் மிகுதியொன்று விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.6 வைப்பு மிகுதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 570 இன் பிரகாரம் காணிக் கோரிக்கைகளுக்கான வைப்புத் தொகைகளைத் தவிர செயற்திட்ட நிதிய வைப்புக்கள் செயற்திட்டம் முடிவடைந்த தினத்திலிருந்து 02 வருடங்கள் மற்றும் ஏனைய அனைத்து வைப்புக்களும் 02 வருட காலப் பகுதிக்குள் உரிமை கோரப்படாவிட்டால் அவை காலாவதியாகிய வைப்புக்களாக கருதப்பட வேண்டியதுடன் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் காலாவதியாகிய வைப்புக்கள் குறிப்பிட்ட கணக்கிற்கு அல்லது | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | காலாவதியாகிய வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 570 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அரச வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 இல் வைப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 17,741,534 ஆன 51 வைப்புக்கள் தொடர்பாக 2021 ஏப்ரல் 01 ஆந் திகதி வரையில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் புதிய 22 செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக மதிப்பிடப்பட்டிருந்ததுடன், முன்னைய வருடத்தில் முடிக்கப்படாத 28 செயற்திட்டங்கள் 2020 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருந்தன. முன்னைய வருடங்களுக்கான 16 செயற்திட்டங்கள் மற்றும் 2020 ஆம் ஆண்டில் 12 செயற்திட்டங்களுக்கான வேலைகள் மீளாய்வாண்டில் முடிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2020 ஆம் ஆண்டில் 06 செயற்திட்டங்கள் முடிக்கப்படாது கைவிடப்பட்டிருந்ததுடன் 16 செயற்திட்டங்களுக்கான வேலைகள் முடிக்கப்பட வேண்டியிருந்தன. | 2021 ஆம் ஆண்டின் புதிய 21 செயற்திட்டங்களில் 04 செயற்திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டு முடிவடைந்துள்ளதாகவும், 06 செயற்திட்டங்களின் நிர்மாணங்கள் வழங்கப்படுவதில் சிக்கல் நிலைமைகள் காரணமாக வழங்கப்படவில்லை என்பதாகவும் தடையல்லாத 27 செயற்திட்டங்களில் 04 செயற்திட்டங்களின் வேலைகள் முடிவடைந்துள்ளதாகவும் ஒரு செயற்திட்டத்தின் வேலை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் மற்றும் 04 செயற்திட்டங்களின் வேலைகள் நிறைவடைந்துள்ளது. | குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டம் நிறைவேற்றப் படுவதற்கு முடியுமானளவு மற்றும் தேவைகளை இனங்கண்டு திட்டங்கள் முறையாக தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிறைவேற்று வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவுமட்டத்தை அடைந்து கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஹொக்கி மைதானத்தில் செயற்கை ஒளித்தெறிப்புக் கட்டமைப்பை வடிவமைத்தல்** | | |
| பார்வையாளர்களுக்கு மிகவும் நன்றாகத் தெரியக் கூடிய வகையில் மற்றும் தொலைகாட்சியிற்கும் பயன்படுத்தக் கூடிய வகையில் திட்டமிடப்படுவதாக இவ்விளையாட்டு மைதானத்தின் செயற்கை ஒளித்தெறிப்புக் கட்டமைப்பின் தேவைப்பாடு விபரக்குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிலையானதாக ஒரு கம்பத்தின் உயரம் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. ஆனால் சர்வதேச ஹொக்கி சம்மேளனத்தில் காட்டப்பட்டுள்ள விபரக் குறிப்புக்களின் பிரகாரம் கம்பமொன்றின் உயரம் 20 மீற்றர் ஆக இருக்க வேண்டிய போதிலும் நிறுவப்பட்டிருந்த கம்பமொன்றின் உயரம் 16 மீற்றர் ஆகும். அதன் பிரகாரம் தேவைப்பாடு உறுதியாகக் குறிப்பிடப்பட்டிராத காரணத்தினால் எதிர்காலத்தில் இதை முதல் தர ஹொக்கி செயற்கை ஹொக்கி மைதானமாக மாற்றுவதற்கு | இந்த விளையாட்டு மைதானத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளமை மின்சார ஒளித்தெறிப்புக் கட்டமைப்பொன்று தயாரித்தலாகும். அதன் பிரகாரம் நடைபெறுகின்ற போட்டிகளைக் கருத்திற் கொண்டு இரண்டாம் வகுப்பின் மின் ஒளித்தெறிப்புக் கட்டமைப்பொன்று தயாரித்தலானது மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>அதன் பிரகாரம் குறிப்பிட்ட மின் ஒளித்தெறிப்புக் கட்டமைப்பின் தூரம் மற்றும் மின் ஒளித்தெறிப்புக் கட்டமைப்பின் சாய்வுக்கு ஏற்ப வடிவமைப்பு (Design) செய்யப்பட்டுள்ளது. விளையாட்டு மைதானத்தின் கம்பங்கள் நிற்கும் தூரத்தின் பிரகாரம் கம்பத்தின் உயரம் தீர்மானிக்கப்படுவதுடன் இதில் சர்வதேச ஹொக்கி சம்மேளனத்தின் முடிவின் பிரகாரம் கம்பத்தின் உயரம் மின் ஒளித்தெறிப்புப் பெறப்படுகின்ற முறையைக் கருத்திற் கொண்டு 16 மீற்றர் உயரத்திற்கு நிறுவப்பட்டுள்ளது. அத்துடன் இது சர்வதேச மட்டத்தில் இரண்டாம் வகுப்பின் மின் ஒளித்தெறிப்புக் கட்டமைப்பையும் | குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய வரையில் மற்றும் செயலாற்றலை அதிகரிக்கும் வகையில் செயற்திட்டங்கள் திட்டமிட்டுச் செயற்படுத்தப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடியாதிருந்தது. இதன் பிரகாரம் விளையாட்டு மைதானத்திற்காக இரவு நேரங்களில் குறிப்பிட்ட செயற்கை ஒளித்தெறிப்பொன்று வழங்கப்படாத காரணத்தினால் விளையாட்டு மைதானம் இரவு நேரங்களில் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் காணப்படுகின்றது. | கொண்டுள்ளது. தற்போது சர்வதேச மட்டத்தில் சில போட்டிகள் நடாத்தப்பட்டு வருவதாகவும் தயவுடன் தெரிவிக்கின்றேன். | |
| **(ஆ)** | **கலேவல மாவட்டப் பொது விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல்** | | |
| **(i)** | இவ்விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்தி நடவடிக்கைக்காக ரூபா 11,008,947 (வரி நீங்கலாக) பெறுமதிக்கு காணி மற்றும் நிலமீட்டல் மற்றும் அபிவிருத்திக் கம்பனிக்கு 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணமாக ரூபா 2,464,884 செலுத்தப்பட்டிருந்தது. அந்நிறுவனத்தினால் செயற்திட்டம் செயற்படுத்தப்படாதிருந்த துடன் முற்பணத் தொகை 18-23 மாதங்களுக்கிடைப் பட்ட காலமாக தேக்க வைக்கப்பட்டு மீண்டும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணி நிலமீட்டல் மற்றும் அபிவிருத்தி கம்பனியில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டமொன்று என்பதுடன் கண்டி கிங்ஸ்வூட் வித்தியாலயத்தின் பற்றுச்சீட்டுக்கள் மூலம் இத்தொகை தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட நிர்மாண நடவடிக்கைகள் நிர்வகிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப் படல் வேண்டும். |
| **(ii)** | மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் (CECB) மூலம் செயற்திட்டத்திற்காக ரூபா 16,039,750 ஆன மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டில் போட்டி | உடன்படுகின்றேன். | அரச நிதியை செயற்திறனுடன் நிர்வகிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விலைமனுக்கோரல் முறைமை பின்பற்றப்படுவதற்குப் பதிலாக சந்தை விலை ஒப்பீட்டு முறைமை பின்பற்றப்பட்டு ரூபா 14,831,000 பெறுமதிக்கு தனியார் நிர்மாண கம்பனியொன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு வேலை தொடங்குவதற்கான முற்பணமாக ரூபா 2,966,200 ஆனது 2016 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| **(iii)** | விளையாட்டு மைதானத்தின் அருகில் உள்ள ஏரியில் தண்ணீர் நிரம்பினால் விளையாட்டு மைதானம் மூழ்குதல், மண் நிரப்புதல் செய்யப்பட வேண்டிய மட்டத்தை உயர்த்துதல், குளத்தின் வடிகால் நீளத்தை 272 மீற்றரிலிருந்து 470 மீற்றராக உயர்த்துதல், அளவுப் பத்திரத்தின் புல் வெட்டப்பட வேண்டிய பகுதி 6500 கனமீற்றர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அது 14,500 சதுர மீற்றராக மாற்றப்பட்டமை மற்றும் தற்போதுள்ள கட்டிடம் அளவுப் பத்திரத்தில் குறிப்பிடப்படாமை போன்ற விடயங்கள் ஒப்பந்தக் காரரினால் விளையாட்டு மைதானம் நிர்மாணித்தலிலுள்ள சிக்கல்கள் என்பதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | உடன்படுகின்றேன். | செயற்திட்டம் குறிப்பிட்ட நியமங்களுக்கு இணங்க திட்டமிடப்பட வேண்டியதுடன் நிர்மாண நடவடிக்கைகள் நிர்வகிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(iv)** | விளையாட்டு மைதானத்தின் 400 மீற்றர் உத்தேச ஓடுதளம் கிராமியச்சாலையின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள காரணத்தினால் குறித்த நியமத்தின் பிரகாரம் ஓடுதளம் அமைக்கப்படாது 200 மீற்றர் வரையில் குறைக்கப்பட்டிருந்தது. பொறியியல் மதிப்பீடுகளை தயாரிக்கும் போது சமூக மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் தொடர்பாக கருத்திற் கொள்ளப் பட்டிருக்கவில்லை. முறையாக பொறியியல் மதிப்பீடு தயாரிக்கப்படாமையால் நூற்றுக்கு 58 வீதமான வேலை விடயங்கள் நீக்கப்பட்டு ரூபா 9,290,000 ஆன பெறுமதியொன்றுக்காக மட்டும் விளையாட்டு மைதானத்தின் வேலைகள் (Ground work) சேர்க்கப்பட்டு ஒப்பந்தக் காரரினால் திருத்திய மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இது கிராமிய விளையாட்டு மைதானமொன்றாக கருதப்பட்டு 200 மீற்றர் ஓடுகளமொன்றுக்காக பெறப்பட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அமைக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டமை மற்றும் குளத்திற்கு நீர் தெறிக்கும் காரணத்திற்காகவும் இவ்வாறு ஏற்பட்டுள்ளது. | செயற்திட்டம் குறிப்பிட்ட நியமங்களுக்கு இணங்க திட்டமிடப்பட வேண்டியதுடன் நிர்மாண நடவடிக்கைகள் நிர்வகிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப் படல் வேண்டும். |
| **(v)** | வடிகால் வசதிகள் செய்யப்படாத காரணத்தினால் விளையாட்டு மைதானத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்குதல் மற்றும் விளையாட்டு மைதானத்தின் மேற்பரப்பு சல்லிக் கற்களால் அமைக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியிலுள்ள குழந்தைகளுக்கு விளையாட்டு பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சிரமங்கள் காணப்படுகின்ற காரணத்தால் | இதற்காக 2022 ஆம் ஆண்டில் ஒதுக்கங்கள் கோரப்பட்டுள்ளது. | எதிர்பார்த்த செயலாற்றலைப் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு செயற்திட்டம் குறிப்பிட்ட நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டியதுடன் நிர்மாண நடவடிக்கைகள் நிர்வகிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப் படல் வேண்டும்.. |

இவ்விளையாட்டு மைதானத்திற்காக செலவிடப்பட்ட கிரயத்திற்கு எதிர்பார்த்த செயலாற்றலொன்று பெற்றுக் கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**(இ) வடமாகாண விளையாட்டுத் தொகுதி கிளிநொச்சி நீச்சல் தடாகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள்**

கிளிநொச்சி மாகாண மட்டத்தில் விளையாட்டுத் தொகுதி நிர்மாணிப்பதற்கான கிரயம் ரூபா 375,060,183 என்பதுடன் அது நிர்மாணிக்கப்பட்டு 2019 மார்ச் 17 ஆந் திகதி திறக்கப்பட்டிருந்தது. நீச்சல் குளத்தில் மூன்று நீர் வடிப்பான்கள் நிறுவப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் வடிப்பான் ஒன்று செயலற்றுக் காணப்பட்டதால் குழாய் அமைப்புக்கள் உடைந்து தண்ணீரைப் போதுமானளவு வடி கட்டுவதற்கு முடியாதிருந்தது. நீச்சல் குளத்திலுள்ள வெற்றிட அமைப்பு செயற்படாத காரணம் மற்றும் வெற்றிட அமைப்பில் மற்றும் இணைக்கப்பட்டுள்ள குழாயில் கசிவு ஏற்பட்டமையாலும் நீச்சல் குளத்தின் வெற்றிட அமைப்பினூடாக நீச்சல் குளத்திற்குள் மணல் நுழைவது அவதானிக்கப்பட்டது. 2020 திசெம்பர் வரையில் வடக்குப் பகுதியில் கோபுரம் மற்றும் தெற்குப்

தற்போது சகல குறைபாடுகளும் திருத்தப்பட்டு நீச்சல் தடாகத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், குறிப்பிடப்பட்டுள்ள நுழைவு வாயில் நிர்மாணம் மிகுதி ஒதுக்கங்களின் அடிப்படையில் செய்யப்பட முடியுமென்பதை தெரிவிக்கின்றேன்.

கிளிநொச்சி விளையாட்டுத் தொகுதி வளாகத்தில் 05 நீச்சல் தடாகங்களையும் எதிர்காலத்தில் தனிப்பட்ட முதலீட்டாளர்களிடம் கையளிப்பதற்கு தற்போது பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்பார்த்த பலன்களைப் பெறுவதற்கு உரிய முறையில் செயற்திட்டம் நிர்மாணிக்கப் பட்டதன் பின்னர் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

பக்கம் நுழைவுவாயில் என்பன அமைக்கப்படாமையால் காற்றுவீசும் காலங்களில் நீச்சல் குளத்தின் அருகே தூசுகள் படிந்திருந்தது. தண்ணீர் இயந்திரத்திற்கு மின்சாரம் வழங்கும் போது குறிப்பிட்ட நியமங்களின் பிரகாரம் நிர்மாணம் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. 05 நீச்சல் தடாக வளாகங்கள் நிர்மாணித்து முடிக்கப்பட்டு இரு வருடங்கள் கடந்திருந்த போதிலும் அவற்றை வாடகைக்கு விடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. கிளிநொச்சி விளையாட்டுத் தொகுதி வளாகத்தில் 06 ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் 04 மைதான உதவியாளர்கள் இருந்த போதிலும் நீச்சல் தடாகத்தைச் சுற்றியுள்ள சூழல் உரிய முறையில் சுத்தம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டிருக்க வில்லை.

## 3.3 செயற்திட்டங்களை நிர்மாணிப்பதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த மதிப்பீட்டில் ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த 25 செயற்திட்டங்களை நிர்மாணிப்பத்தில் தாமதம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்வதில் தாமதம், வேலைகள் முடிக்கப்படாமை, மின்சார வழங்கல் பெறப்பட வேண்டி இருந்தமை, போதியளவு ஒதுக்கங்கள் பெறப்படாமை, தொல்பொருள் பெறுமதியுள்ள இடமாக இருந்ததால் நிர்மாணம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு பின்னர் அனுமதி வழங்கப்பட்டமை, ஆலோசனை நிறுவனம் மற்றும் ஒப்பந்த | நிர்மாணத்திற்கு உரிய குறிப்பிட்ட காலப்பகுதி சரியாகத் திட்டமிடப்பட்டு மற்றும் திட்டமிடப்பட்ட பணிகள் முடிக்கப் படுவதற்காக நிர்மாண நடவடிக்கைகள் மேற்பார்வை செய்யப்பட்டு |

| | | |
|---|---|---|
| | நிறுவனங்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சினைகள் மற்றும் செயற்திட்டங்களை நிர்மாணிக்கும் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட தேசிய இயந்திரங்கள் நிறுவனத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் என்பன செயற்திட்டங்களின் வேலைகள் தாமதமாகியமைக்கான காரணங்களாக இருந்தன. | ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். |

## 3.4 சொத்து முகாமைத்துவம் - வருடாந்த பொருட் கணிப்பீட்டு அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டில் பொருட் கணிப்பீட்டின் போது மேலதிகப் பொருள் விடயங்கள் 190 இல் 4509 அலகுகள் காணப்பட்டமை நி.பி 751 இன் பிரகாரம் பொருட் பதிவேட்டிலோ அல்லது 763 ஆம் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த களஞ்சியசாலை புத்தகங்களில் பெறுவனவுகளாக உள்ளடக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 751 மற்றும் 763 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்குமாறு அனைத்து பிரிவுத் தலைவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சொத்துக்கள் சரியாக இனங் காணப்பட வேண்டியமை மற்றும் நிதிப் பிரமாணம் 751 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) 2020 ஆம் ஆண்டின் பொருட் கணிப்பீட்டின் போது 48 பொருள் விடயங்களில் 411 அலகுகள் பற்றாக்குறையாகக் காணப்பட்டமை தொடர்பில் நி.பி 103(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் அந் நடைமுறைகளைப் பின்பற்றியதன் பின்னர் நி.பி 760 இன் பிரகாரம் முறையான மேற்பார்வையின் கீழ் | குறிப்பிட்ட பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சொத்து கட்டுப்பாடு மற்றும் சொத்து முகாமைத்துவம் குறிப்பிட்ட உள்ளகக் கட்டுப்பாட்டுடன் செயற்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொருட் பதிவேடு, இருப்புப் புத்தகம் போன்றவற்றிருந்து அப் பொருட்கள் நீக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கு உரிய றீட் அவனியூ ஹொக்கி விளையாட்டு மைதானத்தின் செயற்கை ஒளித்தெறிப்புக் கட்டமைப்பு நிர்மாணம், வழங்குதல், நிறுவுதல் மற்றும் பரிசோதித்தல் போன்ற செயற்பாடுகள் 2017 ஆகஸ்ட் 08 ஆந் திகதி பூரணப்படுத்தப் பட்டிருந்த போதிலும் ரூபா 25,832,600 பெறுமதியான பொருத்தும் பொருட்கள் பதிவேடுகளில் உள்ளடக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 752/2 இன் பிரகாரம் பராமரிக்கப்பட்டு வருமாறு குறித்த பிரிவுத் தலைவர் மற்றும் பொறுப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சொத்துக்கள் சரியாக கணக்கிடப்படல் மற்றும் நிதிப் பிரமாணம் 751 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு சொந்தமான வான் வாகனமொன்று இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் தொடர்பாடல் அலகிற்கு 2019 சனவரி 21 ஆந் திகதி தற்காலிகமாக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 யூலை 05 வரையில் திணைக்களத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கான அல்லது இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சிற்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | ஒப்படைப்பதற்கு உரிய மாதிரிப் படிவம் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. வாகனம் குத்தகை முறையின் கீழ் பெறப்பட்டிருந்தமையால் அரசின் பதிவுச் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்காக தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு குறிப்படப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. | சொத்து முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |

## 3.6 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசின் பணம், வருமான முத்திரை அல்லது சரக்குகளைப் பெறுதல் அல்லது வைத்திருத்தல், அவ்வாறான அரச பணங்களை விநியோகித்தல் அல்லது முத்திரைகள், சரக்குகளை வழங்குதற்கு நிர்வாக ரீதியில் பொறுப்பு வாய்ந்த அல்லது அதிகாரங்கள் கையளித்தலின் கீழ் அந்நடவடிக்கைகள் பகிர்ந்தளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களும், அரச கணக்கிற்கான உறுதிச்சீட்டுக்கள், சான்றுப்படுத்தி காசோலைகளில் கையொப்பமிடுபவர்கள் தமது கடமைகளை நேர்மையாகச் செய்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்தி 612 ஆம் அதிகாரத்தின் அரச உத்தியோகத்தர்களின் பிணை அதிகாரச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்கப்பட வேண்டிய போதிலும் 08 பதவிகளுக்கான உத்தியோகத்தர்கள் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | தற்போது பிணை வைப்புக்களற்ற உத்தியோகத்தர்களுக்கு பிணை வைப்புச் செய்வதற்காக அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அந்நடவடிக்கையைப் பூரணப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.7 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **திணைக்களத்திற்கு சொந்தமான காலி தடல்ல மாவட்ட விளையாட்டுத் தொகுதியின் பராமரிப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கை** | | |
| (அ) நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த காலி தடல்ல மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்கான மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 370.699 மில்லியன் என்பதுடன் 2021 மார்ச் 31 இல் மொத்தக் கிரயம் ரூபா 293.828 மில்லியன் என்பதுடன் இந்த விளையாட்டுத் தொகுதியின் நிர்வாக மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலங்கை வொலிபோல் சம்மேளனத்துடன் வர்த்தகப் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடுவதற்கு விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தில் அமைந்திருந்த வளாகத்தின் காணியின் உரிமை விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. மேலும் இப்புரிந்துணர்வு | காலி மாவட்ட விளையாட்டுத் தொகுதியின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்தல் இலங்கை வொலிபோல் சம்மேளனத்திற்கு ஒப்படைப்பது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் இணக்கத்தைப் பெறுவதற்கு நகர அபிவிருத்தி பணிப்பாளர் நாயகத்திற்கு 2021.08.12 ஆந் திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடு வதற்கு முன்னர் செயற்திட்டம் நிர்மாணிக்கப் பட்ட காணியின் சட்டரீதியான தன்மை தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து இணக்கமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது அங்கீகரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மாவட்ட விளையாட்டுத் தொகுதி முகாமைத்துவம் மாகாண விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் நிறைவேற்றப்படுவதற்கு இந்த விளையாட்டுத் தொகுதி நிர்மாணிக்கும்போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும் அதற்கு மாறாக இவ்விளையாட்டுத் தொகுதி பராமரிப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் 2020 செப்டம்பர் 06 ஆந் திகதியிலிருந்து 2050 இலங்கை செப்டம்பர் 25 வரையான 30 வருட காலத்திற்கு இலங்கை வொலிபோல் சம்மேளனத்திற்கு வழங்கப்படுவதற்கு பணிப்பாளர் நாயகம் மற்றும் இலங்கை வொலிபோல் சம்மேளனத்தின் பிரதான செயலாளருடன் 2020 செப்டம்பர் 26 ஆந் திகதி வர்த்தகப் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. இப்புரிந்துணர்வு உடன்படிக்கை ஒரு வழக்கறிஞரினால் சான்றுப்படுத்தப் பட்டிருக்கவில்லை என்பதுடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள | இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்குக் குறித்து கொள்ளப்பட்டது. | அமைச்சரவை முடிவுகள் மற்றும் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| விடயங்கள் தொடர்பாக சட்டபூர்வமான செல்லுபடியாகும் காலம் தொடர்பில் உறுதிப்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) உடன்படிக்கையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம் இவ்விளையாட்டு மைதானத்தின் கட்டிட வளாகம் விளையாட்டு நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் போது அதற்காக உரித்தாகின்ற பணிகள் நடைமுறை வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை என்பதுடன் ஒதுக்கங்கள், கொடுப்பனவுகள் மற்றும் கணக்கின் வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான விரிவான அறிக்கையொன்று நிர்வாக சபையினால் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | புரிந்துணர்வு உடன்படிக்கைப் பிரகாரம் மாதத்திற்கு ஒரு தடவை பணம் செலுத்துதல் மற்றும் கணக்கின் வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான விரிவான அறிக்கையொன்று நிர்வாக சபையினால் சமர்ப்பிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக நிர்வாக சபைக்கு மீள் நினைவூட்டலொன்று செய்யப்பட்டு உரிய அறிக்கையைப் பெறுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்புக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி செயற்படுதல் மற்றும் சரியான நிர்வாகமொன்றை மேற்கொள்ள வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்தல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் நிறுவப்பட்டிருந்த 03 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளுக்காக 06 இலக்குகளை நிறுவியுள்ளதுடன் அந்த இலக்குகளுக்கான 06 வெற்றிக் குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்படாத காரணத்தினால் முன்னேற்றமொன்று அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நிறைவேற்று வதற்கும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான இலக்குகளை |

| | | |
|---|---|---|
| ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் வருடத்தில் திணைக்களத்தின் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான இலக்கு ஒன்றாக 2028 ஆம் ஆண்டு வரையில் பிரதான 05 விளையாட்டுக்களில் ஒலிம்பிக் உடற்பயிற்சி மட்டத்தை அடைந்து கொள்தல் மற்றும் வெற்றியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக வெற்றிக் குறிகாட்டிகள் இனங்காணப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தலைமைத்துவப் போட்டிகளில் வெற்றி பெற்று சர்வதேச பதக்கங்களைப் பெற்றுக் கொண்ட எண்ணிக்கையின் முன்னேற்றம் நூற்றுக்கு 5 வீதம் மட்டுமே என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக மிகுதி இலக்குகள் ஐந்திற்காக குறிப்பிடப்பட்டிருந்த வெற்றிக் குறிகாட்டிகள் 05 இற்காக எவ்வித முன்னேற்றமொன்றும் கையகப்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | அடைவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் சிரேஷ்ட மட்டத்திலான 02 வெற்றிடங்கள், மூன்றாம் மட்டத்தில் 09 வெற்றிடங்களும், இரண்டாம் மட்டத்தில் 78 வெற்றிடங்களும், ஆரம்ப மட்டத்தில் 24 வெற்றிடங்களுமாக காணப்பட்டதுடன் அவற்றுள் உள்ளடங்கும் திணைக்களத்தின் மற்றும் விளையாட்டுத் துறையின் செயலாற்றலில் பெருமளவு | இது தொடர்பாக ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆட்சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | பற்றாக்குறை பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

தாக்கத்தை ஏற்படுத்தும் சிரேஷ்ட மட்டத்திலான 02 பதவிகள் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகள் தொடர்பான பதவியணியினரில் 08 பதவிகளுக்கான 56 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.